# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்ட ஊர்க்காவல் படைப்பிரிவில் **(தென்காசி மாவட்டம் உட்பட)** சேர்ந்து சேவை செய்வதற்காக திருநெல்வேலி ஊரக உட்கோட்ட காவல் நிலையங்களுக்கு உட்பட்ட **திருநெல்வேலி தாலுகா, தாழையூத்து, சிவந்திபட்டி, சீவலப்பேரி, மானூர், தேவர்குளம், கங்கைகொண்டான், சீதபற்பநல்லூர்** பகுதியில் இருந்து ஆண்களும் மற்றும் தென்காசி உட்கோட்ட காவல் நிலையங்களுக்கு உட்பட்ட **தென்காசி, குற்றாலம், செங்கோட்டை, புளியரை, ஆய்க்குடி, அச்சன்புதூர், சாம்பவர்வடகரை, இலத்தூர்** பகுதியில் இருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் தேர்வு செய்யப்பட உள்ளார்கள். ஊர்க்காவல் படைப்பிரிவில் சேர்ந்து சேவை செய்ய விரும்பும் நபர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் நல்ல உடற்தகுதியுடனும் இருத்தல் வேண்டும். குறைந்தபட்ச கல்வி தகுதி 10-ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். அரசு துறையில் பணிபுரிபவர்களாகவோ அல்லது சுயதொழில் செய்பவர்களாகவோ இருக்கலாம். தேர்ந்தெடுக்கப்படும் ஊர்க்காவல் படை ஆளினர்களுக்கு காவல் துறையினரால் 45 வேலை நாட்கள் சிறப்பு பயிற்சி வழங்கப்படும் அதன் பின்னர் சேவை புரியும் காலத்தில் அழைப்பு பணி ஒன்றுக்கு ரூபாய் 280/- மட்டும் சன்மானமாக வழங்கப்படும். (அதிகப்பட்சமாக மாதத்திற்கு 10 அழைப்பு பணிகள் மட்டும்) இப்பிரிவில் சேவை செய்ய விருப்பம் உள்ளவர்கள் பயோடேட்டா, கல்வி மற்றும் வயது சான்றின் நகல்கள், 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் சுயமுகவரி குறிப்பிட்ட அஞ்சல் அட்டையுடன் விருப்ப மனுவினையும் 16.11.2020 அன்று 12.00 மணிக்குள் பாளையங்கோட்டையில் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களது அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு. நெ. மணிவண்ணன், இ.கா.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.